பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மடல் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 28 புதன்கிழமை (12-08 1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 258

உடனுதவும் 12-08-1992 பகுதி

# தெற்கில் அரச விரோத போக்கு மேலும் தீவிரமடையும் நிலை!

## தளபதிகள் மரணம் குறித்து விசாரிக்க ஆணைக்குழு

அராலித்துறைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை ஒன்பது படைத் தளபதிகளும் மற்றும் சிப்பாய் ஒருவரும் உயிரிழந்ததற்குக் காரணமான கண்ணி வெடித் தாக்குதல் சம்பவம் பற்றி விசாரணை நடத்த தனிநபர் ஆணைக்குழு ஒன்றைப் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா நியமித்துள்ளார்.

முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் ஐ. எம். இஸ்மாயில் இந்த விசாரணைக் குழுவின் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கண்ணி வெடித் தாக்குதலுக்கு வழிவகுத்த சம்பவங்கள், சூழ்நிலைகள், இதற்குக் காரணமானோர், இத்தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை, பாதுகாப்புப் படையினர் தரப்பில் ஏற்பட்ட பாதுகாப்புக் குறைபாடுகள் ஆகியன பற்றி இந்தக் குழு விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சின் உதவிச் செயலாளர் யூ. ஆர். எச். கஜலி ஆணைக்குழுவின் செயலாளராகப் பணி புரிவார்.

[உ-த-எ]

## யுத்தத்தை வேண்டும் என்றே ஆட்சியாளர் நீடிப்பதாகக் கருத்து

கொழும்பு, ஆகஸ்ட் 12

உயர்படை அதிகாரிகளின் உயிரிழப்பைத் தொடர்ந்து, தெற்கில் உருவாகியுள்ள அரசாங்க விரோதப் போக்கு மேலும் தீவிரமடையலாம் என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு யுத்தத் தைத் தேவையில்லாமல் தனது நலன் கருதி அரசு வேண்டுமென்றே நீடித்து வருவதை தென்னிலங்கை மக்களில் பெரும் பகுதியினர் உணர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் அமரதுங்காவும் கல்வீச்சில் காயமுற்றார்!

லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் இறுதிக்கிரியைகள் நேற்று முன் தினம் நடைபெற்ற போது ஆத்திரமடைந்த கூட்டத்தினர் நடத்திய கல்வீச்சில் வெளியுறவுத் துணை அமைச்சர் ஜோன் அமரதுங்கவும் காயமடைந்தார்.

அமைச்சர் ஜோன் அமரதுங்க இரங்கலுரை நிகழ்த்த எழுந்தபோது கூடியிருந்த மக்கள் பெரும் கூக்குரல் எழுப்பினர் என்றும்—

அதன் பின்னர் இடம்பெற்ற கல்வீச்சில் அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கவுடன் அமைச்சர் அமரதுங்கவும் காயமடைந்தார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(உ-எ-10)

## கொழும்பில் இன்றும் கலவரம் வெடிக்கலாம் என்று அச்சம்!

கொழும்பில் இன்றும் கலவரங்கள் ஆர்ப்பாட்டங்கள் வெடிக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. திங்கட்கிழமை லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் இறுதிச் சடங்குகளின் போது கனத்தையில் இடம்பெற்றது போன்ற அசம்பாவிதங்கள் இன்றும் நிகழலாம் என எதிர் பார்க்கப்படுகிறதாம்.

யாழ் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் விஜய விமலரத்னாவின் இறுதிச்சடங்குகள் இன்று மாலை 5 மணிக்கும்—

வைஸ்அட்மிரல் மொஹான் ஜயமஹாவின் இறுதிச் சடங்குகள் இன்று காலை 10.30 மணிக்கும் — நடைபெறவுள்ளன.

மேஜர் ஜெனரல் விஜய விமலரத்னாவின் இறுதிச் சடங்குகளின் போது, ஆர்ப்பாட்டங்கள், கலவரங்கள் இடம்பெறக்கூடும் என்று தாம் அஞ்சுவதாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

ஆனால், திங்கட்கிழமை நடந்தது போன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்க பூரண பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(அ-எ-10)

## விமர்சகர் தயான் ஜெயதிலக நையப்புடைக்கப்பட்டார்!

லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவவின் இறுதிக் கிரியைகள் கனத்தையில் நடைபெற்ற சமயம் இடம்பெற்ற கலவரங்களின்போது பிரபல அரசியல் விமர்சகர் தயான் ஜெயதிலகவும் நையப்புடைக்கப்பட்டார்.

கடுமையான தாக்குதலுக்கு இலக்கான அவர் ஆடையில்லாத நிலையில் கனத்தை மயானத்தில் இருந்து கூட்டிச் செல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தயான் ஜெயதிலக ஜனாதிபதி பிரேமதாஸாவின் உத்தியோகப்பற்றற்ற ஆலோசகர்.

பிரபல பத்திரிகையாளர் மேர்வின் டி. சில்வாவின் மகனான தயான் ஜெயதிலக முன்னர் ஈ. பி. ஆர். எல். எவ். அமைத்த வடக்கு-கிழக்கு மாகாணசபையின் அமைச்சராகப் பணிபுரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

[உ-எ-10]

## மீனவர்களை நோக்கிச் சூடு!

யாழ்ப்பாணம், ஆக. 12

பூநகரி - கல்முனைப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்றுக்காலை அரியாலை கிழக்கு கடற் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

எனினும் மீனவர்கள் காயம் எதுவுமின்றிக் கரை திரும்பினர்.

இதேவேளை வளலாய் பகுதியிலும் படையினர் நேற்றுக் காலை 50 கலிபர் துப்பாக்கி தாக்குதலை நடத்தினர்.

[த-3-51-162]

## ஐ.நா. தூதரக ஏற்பாட்டில் முதலில் 900 ஈழ அகதிகள் கப்பல் மூலம் மன்னாருக்கு!

யாழ்ப்பாணம், ஆக. 12

தமிழகத்திருந்து ஈழத்தமிழ் அகதிகள் ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் மேற்பார்வையில் முதல் தடவையாக எதிர்வரும் திங்கட்கிழமை கப்பல் மூலம் மன்னாருக்கு அழைத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

தாயகம் திரும்பும் ஆறாயிரம் அகதிகளை ஐ. நா. அகதிகள் தூதரக அதிகாரிகள் இங்கு அழைத்துவர ஏற்பாடாகியிருக்கிறது.

இவர்களில் முதல் தொகுதியாக 900 அகதிகள் எதிர் வரும் திங்கட்கிழமை கப்பல் மூலம் மன்னாருக்கு அழைத்து வரப்படுவர்.

அவர்களில் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல விரும்புவோரை அந்தந்த இடங்களுக்கு அழைத்து சென்று, அவர்களுக்கு நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு உதவிகளை வழங்கும் பொறுப்பை ஐ. நா. அகதிகள் தூதரக அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

ஏனையோரை ஐ. நா. அகதிகள் தூதரகம் அகதி முகாம்களில் வைத்து பராமரிக்கும்.

(உ-3)

## பிரேமாவுக்கு ஆதரவான பிக்குகள் மீதும் தாக்குதல்!

நேற்று முன்தினம் கனத்தையில் இடம்பெற்ற அரச எதிர்ப்புக் கலவத்தின் போது ஜனாதிபதி பிரேமதாஸாவின் நெருங்கிய ஆதரவாளர்களான இரண்டு முக்கிய பிக்குகளும் மற்றும் மூன்று நபர்களும் பொதுமக்களினால் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

பொலீஸாரின் மூன்று மோட்டார் சைக்கிள்களும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

[உ-எ-10]

## மீனவரைக் காணவில்லை

வடமராட்சி, ஆக. 12

பொலிகண்டிப் பகுதியிலிருந்து கடந்த சனியன்று கடற்றொழிலுக்குச் சென்ற இரு இளம் மீனவர்கள் இன்னும் கரை திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

[உ-165]

## தச்சனார் மருதமடு முகாம் திங்கள் திறந்து வைப்பு

மன்னார் மாவட்டத்தில் தச்சனார்மருதமடுவில் ஐ நா. அகதிகள் தூதரகத்தின் அகதிமுகாம் தூதரக அதிகாரிகளால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

தமிழகத்தில் இருந்து திரும்பும் ஈழத் தமிழ் அகதிகளில், சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாதவர்கள் மட்டும் இந்த முகாமில் வைத்துப் பராமரிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஐ நா. அகதிகள் தூதரகம் இலங்கையில் நிறுவியுள்ள நான்காவது முகாம் இதுவாகும். 40 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

[உ-3]

## கடற்படை நடமாட்டம்

வடமராட்சி, ஆக. 12

கடந்த சில தினங்களுக்குப் பின் வடமராட்சி கடற் பிராந்தியப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு கடற்படையினரின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது. இரைச்சலுடன் படையினரின் [illegible]

[உ-165]

## திருவிழாக் கூட்டத்தின் மீது நள்ளிரவு ஹெலி வேட்டு!

### கரவெட்டியில் சம்பவம்

வடமராட்சி, ஆக. 12

நெல்லியடி கரவெட்டி மூத்தவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தை ஒட்டிய கலை நிகழ்ச்சிகள் நள்ளிரவு நடைபெற்றுக்கொண்டிருந்த போது, ஆலயச் சுற்றாடலில் கூடியிருந்தோர் மீது ஹெலிக்கொப்டர் ஒன்று சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தது.

(2 ஆம் பக்கம் பார்க்க)

கானகம் பூப் பூத்தால்
வானகம் நீர் பூக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
## பாடசாலை அபிவிருத்திச் சபை
## பிரதிநிதிகளைத் தெரிதல்

யாழ்: இந்து ஆரம்ப பாடசாலை அபிவிருத்திச் சபைக்கு பெற்றோர் பிரதிநிதிகள் மூவரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம்.

16 - 08 - 92 ஞாயிற்றுக்கிழமை மு. ப: 9.00 மணிக்கும் பழைய மாணவர்களில் இருந்து மூவரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம்;

16 - 08 92 ஞாயிற்றுக்கிழமை பி: ப: 4.00 மணிக்கும் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்;

ஆ. அரவிந்தநாதன்.
(அதிபர்)

(22133)

## மரவேலைப் பயிற்சி

### எமிலியானுஸ்பிள்ளை தொழில் நுட்பக்கல்லூரி

304, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தீவுப்பகுதி இளைஞர்களுக்கு அகில உலக கெயர் நிறுவனத்தால் நடத்தப்படவிருக்கும் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 19-08-1992க்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கொடுப்பனவுகள்: 2½ மாத பயிற்சிக்காலத்தில் பயிற்சியாளருக்கு மாதம் 600 ரூபா வழங்கப்படும்;

(22122) —இயக்குனர்.

## அறிவித்தல்

### யாழ், செயலக புனர்வாழ்வு, புனரமைப்புப் பிரிவு
### கூறுவிலைகோரல்

அத்தியாவசிய சேவைகள் நாயகத்தினால் கடந்த இரு வருடங்களாக அனுப்பப்பட்ட பொருட்களில் மனித உணவுப் பாவனைக்கு உதவாத பழுதடைந்த கூட்டிச் சேகரிக்கப்பட்ட [Sweeping] மேற்குறித்த பொருள்கள் விற்பனை செய்வதற்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு வகைப் பொருள்களையும் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் அதற்கு தாம் உத்தேசமாக ஒரு கிலோவிற்கு / ஒருபக்கற்றுக்கு செலுத்த விரும்பும் விலைகளை அலுவலகத்தில் உள்ள படிவத்தினைப்பெற்று 23 - 08 - 92ஆம் திகதியோ அன்றேல் அதற்கு முன்னரோ கூறுவிலை கோரல் மனுக்களை ஒப்படைக்கும் படி கேட்டுக் கொள்கின்றேன்.

பின்வரும் பொருள்களுக்கான கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளன.

1. பால்மா வகைகள் (அங்கர், கைலண்ட்)
2. அரிசி
3. மாவு
4. சீனி
5. பருப்புவகைகள்


மேலதிக விவரங்களுக்கு யாழ். புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தோடு தொடர்பு கொள்ளலாம்.

செ. பத்மநாதன்,
திட்டப்பணிப்பாளர்,
புனர்வாழ்வுப் பகுதி,
யாழ். அரச அதிபருக்காக.

(சி-3043)

## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்: 07 — 08 — 1954



மறைவு: 14 — 07 — 1992

வல்வெட்டித்துறை

### அமரர் சி. குணசேகரம் (ரகு)

அன்புடையீர்!

அமரர் குணசேகரம் அவர்களின் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்தியமும் நாளை (13-8-1992) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் (காட்டுவளவு - வல்வெட்டித்துறை) நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: சூழ்நிலை காரணமாகத் தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்ப முடியாமையையிட்டு வருந்துகின்றோம்.

இங்ஙனம்
தாய், மனைவி, மகள், சகோதரர்கள், மாமி:
ராஜு ஸ்ரோர்ஸ்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சுப்பிரமணியன் சோடாக் கம்பனி,
வல்வெட்டித்துறை.

(5230)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 12

அமரர் த. ஆலாலசுந்தரம் ஞாபகார்த்தமாக அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ காலை 8.30 மணி:- அரியாலை மஞ்சள் அணி எதிர் ஜொலி ஸ்ரார்ஸ் வி.க. அணி.

★ நண்பகல் 1.00 மணி;- கொக்குவில் ஸி. ஸி. ஸி: 'பி' அணி எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் வி. க. அணி.

முப்பது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட இந்த ஆட்டம் அரியாலை மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும். (உ)

★ ★ ★

குருநகர், ஆக. 12

அமரர் சி. பஞ்சலிங்கம் நினைவாக திருவள்ளுவர் சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் இன்றைய ஆட்டங்கள் மாலை 4மணிக்கு குருநகர் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகும்.

மாலை 4 மணிக்கு திருமலை நட்சத்திரங்கள் வி. க. அணியை எதிர்த்து புனித பதுவையர் வி. க. அணி மோதும் மாலை 5 மணிக்கு மற்றொரு ஆட்டம் நடைபெறும். (உ-51)

## திருவிழாக்...

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

நேற்று அதிகாலை 2மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சில நிமிட நேரம் வேட்டுக்கள் விடாது தீர்க்கப்பட்ட போதும் தெய்வாதீனமாக பெருஞ்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

மக்கள் கூட்டமும், நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருந்த இசைக் கலைஞர்களும் சிதறி ஓடி, பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்தனர்.

சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் கலை நிகழ்ச்சி தொடர்ந்து இடம்பெற்றது;

நெல்லியடி யாக்கரைப் பகுதியிலும் நேற்று அதிகாலை ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது. (உ-15-165)

## தீவகத்திலிருந்து 12 பேர் அழைத்து வரப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஆக. 12

தீவுப்பகுதியிலிருந்து 12 பேர் நேற்று 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவர்களில் நோயாளர்களும், மற்றும் உறவினர்களைப் பிரிந்து தீவுப்பகுதியில் வாழ்ந்தவர்களும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நயினாதீவு, அனலைதீவு பகுதியைச் சேர்ந்த இவர்கள் கடற்படை படகு மூலம் காங்கேசன்துறைக்கு அழைத்து வரப்பட்டு அங்கிருந்து 'குமண' கப்பலில் பருத்தித்துறைக்கு கூட்டி வரப்பட்டனர். (உ-3-162-165)

## மட்டக்களப்புத் தாக்குதலில் ஒரு பொலீஸார் மரணம்

### ஆயுதங்களும் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஆக. 12

மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் இருந்து சைக்கிளில் பெரிய உப்போடைப் பக்கமாகச் சென்ற பொலீஸார் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

கடந்த 6ஆம் திகதி காலை 7-30 மணியளவில் நடந்த இத்தாக்குதலில் ஒரு பொலீஸார் கொல்லப்பட்டார்;

அவரிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கி—1, அதற்குரிய ரவைக்கூடு—1, நடுத்தர ரவைகள்—25 ஆகியவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். (உ-3)

## தெற்கில் அரச விரோத....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் யுத்தத்தைத் தீவிரமாக்கி விரைவில் அதனை முடிவுக்குக் கொண்டு வந்து விட வேண்டும் என்ற தீவிரப் போக்குடையவர்களும் இல்லாமல் இல்லை என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை களத்தையில் இராணுவ உயர் அதிகாரியான டென்சில் கொப்பேகடுவவின் இறுதிச் சடங்குகளின்போது ஏற்பட்ட கலவரத்தின்போது இன விரோத மனோ நிலையைவிட அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்குடனேயே ஆர்ப்பாட்டங்கள் நடந்ததாக வெளிநாட்டு செய்தி ஏஜன்ஸிகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்களும் ஏனைய அவதானிகளும் சுட்டிக்காட்டுகின்றனர்.

அங்கு தமிழருக்கு எதிரான கோஷங்களை விட அரசுக்கு எதிரான கோஷங்களே மேலோங்கி நின்றதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

போர்முனையில் முன்னின்று போராடிய ஒரு தளபதிக்கு உரிய மதிப்புக் கொடுத்து அவரது இறுதிக் கிரியைகள் தேசிய துக்கத்துடன் நடத்தப்படவில்லை என்று பலரும் ஆத்திரமுற்றிருந்ததாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கொள்கையுள்ளவராகவே இருந்தார் என்றும் —

ஓர் இராணுவத் தளபதி என்ற முறையில் தனது கடமையைச் செய்யப் பின் நிற்கவில்லை என்றும் —

அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி அரசு, அவருக்குப் புலிகளின் கையால் மரணத்தைத் தேடிக் கொடுத்து விட்டதாகவும் —

இது தென்னிலங்கையின் படித்த சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும் — அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த நிலைப் புள்ளியிலிருந்து ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும், அரசாங்கத்துக்கும் எதிரான அரசியல் விரோதம் வளர்ந்து ஆபத்தான கட்டத்தை அடையும் சாத்தியம் நிறைய உண்டு எனவும் சொல்லப்படுகிறது. (அ)

## வேலணை பெருங்குளம்
## ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ தினத்தை ஒட்டி

### திருநெல்வேலி ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில்
### ஏற்பாடு செய்துள்ள அலங்கார உற்சவ நிகழ்ச்சிகள்

12—08—1992 ஆம் திகதி புதன்கிழமை இன்று காலை 10 மணிக்கு விசேட அபிஷேகம்.

**இரவு நிகழ்ச்சிகள்:-**

மாலை 6.00 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் ஆரம்பமாகி அழகிய முத்துச் சப்பறத்தில் அம்பாள் வீதி உலாவரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறும்;

**விசேட நிகழ்ச்சிகள்:-**

அருளுரை: நல்லை ஆதீனம் 2 ஆவது குருமஹா சன்னிதானம்
ஸ்ரீலஸ்ரீ பராமாச்சாரிய சுவாமிகள்

**மங்கள இசை:-**

| நாதஸ்வர வித்துவான்கள் | தவில் வித்துவான்கள் |
|---|---|
| திரு. வி. செல்வராஜா | திரு. வி. வரதராஜா |
| திரு. என். கண்ணன் | திரு. ப. சபேசன் |
| திரு. வி. கே. கானமூர்த்தி | திரு. ஆர். ரவீந்திரன் |
| திரு. வி. கே. பஞ்சமூர்த்தி | திரு. ஆர். எஸ். சுதாகர் |
| திரு. எம். பி. நாகேந்திரன் | திரு. கே. ஆர். புண்ணியமூர்த்தி |
| திரு. கே. ஆர். சுந்தரமூர்த்தி | திரு. எஸ். ராமதாஸ் |
| திரு. கே. செல்வரத்தினம் | திரு. என். கணேசமூர்த்தி |
| திரு. ஏ. முருகானந்தன் | திரு. பி. கணேசன் |
| திரு. கே. ஸ்ரீதரன் | திரு. ஆர். பாஸ்கரன் |

**இன்னிசைக் கச்சேரி:- சாந்தன் இசைக் குழுவினர்**

ஒலி, ஒளி அமைப்பு:- திரு. வி. இராசபாக்கியம் புதல்வர், நாச்சிமார் கோவிலடி.

குறிப்பு:- பகல் அன்னதானமும், இரவு 9.30 மணிக்கு தீ மிதிப்பு நிகழ்ச்சியும் நடைபெறும்.

அடியார்களை விழாவில் பங்குபற்றி அருள் பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.

நன்றி

இவ்வண்ணம்,
அம்பிகை அடியார்களும், திருவிழா உபயகாரரும்.

(22151)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அராலி கண்ணி வெடிச் சம்பவம்:

# புலிகளின் சிறப்புப் பிரிவினர் வெற்றிகரமாகத் திரும்பினர்

யாழ்ப்பாணம், ஆகஸ் 12

வடபிராந்திய உயர்தளபதிகள் மூவர் உட்பட ஒன்பது உயர்நிலை அதிகாரிகள் அராலியில் கொல்லப்பட்ட கண்ணிவெடிச் சம்பவத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிய விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சிறப்பு வேவுப் பிரிவினர் பாதுகாப்புடன் திரும்பிவிட்டனர்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வ ஏடான "விடுதலைப் புலிகள்" பத்திரிகையில் செய்தி வெளியாகி உள்ளது.

வட தமிழீழத்தில் நடத்தப்படும் படையெடுப்புக்களினதும் அதற்கான போர் முறைத் திட்டங்களினதும் சூத்திரதாரிகளாக இருந்து வந்த —

இராணுவ உயர் தளபதிகள் — ஒரே சமயத்தில், ஒன்றாக அழிக்கப்பட்டது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக அமைந்து விட்டது.

விடுதலைப் புலிகளின் சிறப்பு வேவுப் பிரிவினர் படைத்த இவ் வரலாற்றுச் சாதனை, பாரிய அரசியல் - இராணுவ திருப்பு முனைகளை ஏற்படுத்தும் என ஊகிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில்என்றுமில்லாதவாறு சிங்களப் படை ஒரு பேரழிவைச் சந்தித்துள்ளது.

சிங்களப் போர்வானின் நம்பிக்கை நட்சத்திரங்களாக இருந்த இந்தத் தளபதிகளின் இழப்பால், சிங்கள தேசம் ஆடிப்போய்] உள்ளது.

சிங்களப்படை சந்தித்துள்ள இப்பேரிழப்பு, ஸ்ரீலங்கா அரசின் இராணுவ இயந்திரத்தில் அடைக்க முடியாத ஒரு வெடிப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்ணிவெடித் தாக்குதலுடன், வடபிராந்திய படைத்துறை ஆணைப் பீடம் (Northern Military Command Structure) முற்றாகவே அழிக்கப்பட்டு விட்டது.

உலகை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ள அராலிச் சம்பவம் தமிழீழ மக்களுக்கு மகிழ்ச்சியையும் - உத்வேகத்தையும் கொடுத்துள்ளது - என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

(ஒ)

## வரட்சியை தாங்கக் கூடிய தக்காளி இனம்

உடுவில், ஆக. 12

யாழ்ப்பாணம் விவசாய திணைக்களத்தால் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள வரட்சியைத் தாங்கக்கூடிய மி.126 ரக தக்காளிக் கன்றுகளை விவசாயிகள் வாங்கி பயனடையவேண்டும்:

யாழ்ப்பாண மாவட்ட விவசாய உத்தியோகத்தர் திரு. சோமசுந்தரம் இப்படிக் கோரிக்கை விடுத்துள்ளார்.

(இ-152]

## திங்கள் முதல் அமுலுக்கு வரும்

குருநகர், ஆக. 12

யாழ். மாவட்டத்தில் உள்ள இறைச்சிக் கடைகள் வாரத்தில் மூன்று தினங்கள் இயங்குவது என்றும், நடைமுறை எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமையில் இருந்தே அமுலாகும்என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி சனி, ஞாயிறு, புதன்கிழமைகளில் மட்டும் இறைச்சிக் கடைகள் திறந்து இருக்கும் என்று யாழ். மாவட்ட இறைச்சிக் கடை உரிமையாளர் சமாசச் செயலாளர் திரு. க. சி. கிருஷ்ணன் தெரிவித்தார். [இ-51]

## அகதி முகாம்கள் புனரமைப்பு

சாவகச்சேரி, ஆக. 12

சாவகச்சேரித் தொகுதியில் மட்டுவில், கைதடி, கெருடாவில், சரசாலை ஆகிய பகுதிகளில் உள்ள அகதிகள் முகாம்களை புனரமைக்கும் பணியை உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை மேற்கொண்டுள்ளார்.

மழைகாலம் ஆரம்பமாக இருப்பதால் குடிசைகளை வேய்வதற்காக கிடுகு, கயிறு, ஈர்க்கு ஆகியவற்றை அவர் வழங்கி வருகிறார்.

[இ-31]

### யாழ். குடாநாட்டுக்கு பொறுப்பாக

## மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா புதிய தளபதியாக நியமனம்?

கொழும்பு, ஆக. 12

யாழ். குடாநாட்டுக்கு பொறுப்பானஇராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா நியமிக்கப்படலாம் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு அரச சார்பு பத்திரிகைகளில் நேற்று செய்திகள் வெளியாகி இருந்தன.

மேஜர் ஜெனரல ஜெரி சில்வா தற்பொழுது கிழக்கிற்குப் பொறுப்பான தளபதியாக செயற்பட்டு வருகிறார் என்பது தெரிந்ததே.

கொல்லப்பட்ட தளபதிகளான டென்சில் கொப்பேகடுவ, விஜய விமலரத்தின ஆகியோரின் இடங்களுக்கு பிரிகேடியர்கள் ரொஹான் தலுவத்த, அசோகா ஜெயவர்த்தன ஆகிய இருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும்-

இவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவசரமாக பலாலிக்குப் போய்ச் சேர்ந்தனர் என்றும் ஏற்கனவே செய்தி வெளியாகி இருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

## புற்றுநோய் தடுப்புச் சங்கம் மீண்டும் நகரில் இயங்கும்

யாழ்ப்பாணம், ஆக. 12

வட மாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கம் இரண்டு ஆண்டு இடைவெளியின் பின் யாழ். நகரில் மீண்டும் இயங்க உள்ளது:

யாழ். நகர் பிரதான வீதியில் உள்ள "பிலிப் நர்ஸிங் ஹோம்" கட்டடத்தில் அடுத்த மாதம் முதற் திகதியிலிருந்து சங்கம் இயங்கும்.

சங்கத்தின் புதிய தலைவராக அண்மையில் தெரிவு செய்யப்பட்ட யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

முன்னர் தெல்லிப்பழை - வறுத்தலைவிளான் பகுதியில் இயங்கிய மேற்படி சங்கத்தின் நடவடிக்கைகள் 1990 ஜூனில் தொடங்கிய இராணுவ நடவடிக்கைகளை அடுத்து ஸ்தம்பித்துப் போனது குறிப்பிடத்தக்கது.

புதிய இடத்தில் சங்கம் இயங்கத் தொடங்கியவுடன் புற்றுநோயை ஆரம்ப நிலையில் இனங்காணும் நோய் ஆய்வு நிலையமும், புற்றுநோயாளர் விடுதியும் அங்கு ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

[ஒ-5]


உ

கொக்குவில் - நந்தாவில்

**கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய**

**சண்டிஹாஹோம விஞ்ஞாபனம்**

ஆடி 29 (13-08-1992) வியாழக்கிழமை காலை 6மணி தொடக்கம் பகல் 12 மணி வரை நடைபெறும்.

உபாகருமம் பகல் 12மணி

மாலை 4 மணிக்கு நவசக்தி அர்ச்சனை

மாலை 5 மணியளவில் அம்பாள் பூச் சப்பறத்தில் திருவீதி உலா

விசேட மேளக்கச்சேரி;

வி. கே. கானமூர்த்தி,

வி. கே. பஞ்சமூர்த்தி சகோதரர்கள்

விசேட தவில்: ஆர். புண்ணியமூர்த்தி

கே. நித்தியானந்தன்

மாலை 7 மணி முதல் 8 மணி வரை

கம்பன் கழக அமைப்பாளர்

திரு. இ. ஜெயராஜ் அவர்களின்

**"நான் அறியேன்"**

என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவு நடைபெறும்.

★ அனைவரும் கலந்து அம்பிகையின் [illegible] அன்புடன் வேண்டுகின்றோம்.

[22126] — பரிபாலன சபை:



வெளிவந்துவிட்டது

உலகம்

அரசியற் பிரிவுகள்

**தமிழ் இலக்கிய வரலாறு**

விற்பனையாளர்

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

[illegible]

யாழ்ப்பாணம்.

(22101)



நல்லைக் கந்தன் திருவிழாவை முன்னிட்டு

உதயன் ஆதரவுடன்

**இந்து சமயப் பேரவை**

நடத்தும்

**சைவசமய வினா-விடைப் போட்டி**


இளவயதினர் மத்தியில் சமய அறிவைப் பெருக்கும் நோக்குடன் நடாத்தப்படும் இப்போட்டியில் 16 வயதுக்கு உட்பட்ட சகலரும் பங்குபற்றலாம். (மாணவர்கள் பாடசாலை அதிபர் மூலமும் ஏனையோர் தங்கள் பகுதிக் கிராம சேவகர் மூலமும் வயதினை உறுதிப்படுத்த வேண்டும்.)

கீழே உள்ள வினாப் படிவத்தை நிரப்பி இம் மாதம் 21ஆம் திகதிக்குப் பிந்தாமல் நல்லை ஆதீனத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தபால் மூலம் கிடைக்கும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

போட்டியில் சிறப்பாகத் தேறும் மூவருக்குப் பெறுமதி மிக்கப் பரிசில்களும், மற்றும் ஐவருக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

பரிசளிப்பு நல்லூர் தேர்த்திருவிழாவன்று [26-08-1992] நல்லை ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறும்.

## வினாப் படிவம்

1. வேதநாயகனே போற்றி என்ற பாடல் எந்த நூலில் உள்ளது? அல்லது யாரால் பாடப்பட்டது என்பதை எழுதுக. ..........
2. இந்துசமயத்திற்கும் சைவசமயத்திற்கும் உள்ள வேறுபாடு யாது? ..........
3. தமிழீழத்திலுள்ள முருகன் கோவில்கள் ஐந்தின் பெயர் எழுதுக. ..........
4. வாய்கட்டிப் பூஜை செய்யும் மூன்று கோவில்களின் பெயர் தருக: ..........
5. முருகனைக் குறிப்பிடும் தமிழ் மந்திரம் யாது? வடமொழி மந்திரம் யாது? ..........
6. நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் சிறப்புகள் இரண்டு எழுதுக: ..........
7. நித்திய பூசையே பெருவிழாப் போல நடைபெறும் கோவில் யாது? ..........
8. நல்லூரின் வருடாந்த உற்சவம் ஆண்டுதோறும் எப்போது நடைபெறுகிறது? ..........
9. நல்லைக் கந்தனுக்கு வேறு பெயர் யாது? ..........
10. நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் முதலாவது குருமகா சந்நிதானத்தின் பெயரைப் பூரணமாக எழுதுக. ..........
11. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் யாரால் கட்டப்பட்டது? ..........
12. மஞ்சரதம் ஓடும் கோவில்கள் எவை? ..........
13. பெண்கள் தேர் இழுக்கும் கோவில்கள் எவை? ..........
14. குமாரபுரம் எங்குள்ளது? .......... அங்கிருந்த பழைய விக்கிரகங்கள் இன்று எங்கு இருக்கின்றன? ..........
15. வண்ணார்பண்ணையிலுள்ள பெருமாள் கோயில் யாரால் கட்டப் பெற்றது? ..........
16. எங்கள் நாட்டில் வாழ்ந்த ஞானியர் பரம்பரையைக் குறிப்பிடுக. ..........
17. சுப்பிரமணிய பாரதியாரின் ஞான குருவாக விளங்கியவர் யார்? ..........
18. சுவாமி முத்தியானந்தரின் மறு பெயர் யாது? ..........
19. கடையிற்சுவாமிகளின் குரு யார்? ..........
20. யோகர் சுவாமிகளின் அயல்நாட்டுச் சீடர்கள் மூவரின் பெயரைக் குறிப்பிடுக. ..........
21. கடையிற் சுவாமிகள் இந்த நாட்டிற்கு வருவதற்கு முக்கிய காரணராக இருந்தவர் யார்? ..........
22. நல்லூர்த் தேரடிக்குச் சமீபமாக உள்ள சமாதி யாருடையது? ..........
23. அருணகிரிநாதர் அருளிய நூல்கள் எவை? ..........
24. இந்து சமயப் பேரவையின் தலைமைக்காரியாலயம் எங்குள்ளது? ..........
25. இந்துசமயப் பேரவையால் நடாத்தப்பெறும் சைவச் சிறார் இல்லம் எங்குள்ளது? ..........

பெயர்:

விலாசம்:

வயது:

விண்ணப்பதாரர் 16 வயதுக்கு உட்பட்டவர் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்;

இவரது பிறந்த திகதி:

பாடசாலை அதிபர் / கிராம சேவை அலுவலர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதியில் பெரிய வீடு நாலரைப் பரப்பில் விற்பனைக்குண்டு. வாங்குபவர் நேரில் வரவும். பாலசிங்கம், இல. 01, செம்மணி வீதி, நல்லூர், முத்திரைச் சந்தை. [சாமுவேல் தொழிற்சாலையிலிருந்து இரண்டாவது வீடு]
[22121]

நல்லின மரக்கறி மற்றும் பழமரநாற்றுகள் விற்பனைக்கு உண்டு. சிறுவர் நிறைவாழ்வு இல்ல நிதிக்கான தற்காலிக விற்பனை நிலையம். நல்லை ஆதீனம் அருகில். சைவவித்தியா விருத்திச் சங்கம், திருநெல்வேலி. [22100]

நல்ல இன வளர்ப்புப் புறாக்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 219/5, கனகசபை அவனியூ [யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்]. [22110]

### தேவை

45 கலன் கொள்கலனில் இருந்து [Barrel] வெட்டி எடுக்கப்பட்ட முழுவட்ட மூடி தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம்.
[சி-3039]

அரச சேவையில் உள்ள தனிநபருக்கு வாழ்க்கைத் துணை தேவை. 48 வயதுக்கு மேற்பட்ட, தாரமிழந்தவர்களும், விவாகரத்து செய்தவர்களும் மற்றும் ஏனையோரும் முழு விவரத்துடன் விண்ணப்பிக்கலாம். தொடர்பு இல. 430, மே/பா, உதயன்.
[22115]

### வெற்றுப் பைக்கற்று

பால்மா வெற்றுப் பைக்கற்றுகள் தொகையாகவும், சில்லறையாகவும் தேவைப்படுகின்றன. இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்: அண்ணா தொழிலகம், இணுவில். [சி-3127]

### மணமகன் தேவை

29 வயது, இந்து, லக்கினத்தில் சேது. நட்சத்திரம் பூரம். 1-ம் பாதம், பட்டதாரி ஆசிரியைக்கு அரசாங்க, தனியார் துறைகளில் 36 வயதிற்குள் மணமகன் தேவை. முழு விவரங்களுடன் தொடர்பு கொள்க. இல. 854, மே/பா உதயன். [5223]

### மணமகள் தேவை

31 வயதுடைய கொழும்பில் தனியார் கொம்பனியில் லிகிதராக மாதம் ஐயாயிரம் பெறும் மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. நட்சத்திரம்: ஆயிலியம், செவ்வாய் இல்லை. G. குணரத்தினம், இல. 169, பலாலி வீதி யாழ்ப்பாணம்.
[22125]

### மணமக்கள் தேவை

30 வயதுடைய, கனடா பிரஜா உரிமையுள்ள புரட்டஸ்தாந்துமத M.Sc. (Ph.D.) என்ஜினியருக்கும், 31 வயதுடைய B.Sc. பல்கலைக்கழக விரிவுரையாள பெண்ணுக்கும் மாற்றுத் திருமணமாகவோ அன்றேல் தனியாகவோ தராதரமுள்ள மணமக்கள் தேவை. R. C. மதத்தவர்களும் விண்ணப்பிக்கலாம். G. குணரத்தினம், இல. 169, பலாலி வீதி. கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.
[22124]

### ENGLISH

English for English Teachers Examination and G A Q External [ESOL] by Kandasamy. மேற்குறிப்பிட்டுள்ள பரீட்சைகளுக்கு ஆங்கிலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இல. 87, திருநெல்வேலி றோட், [பாலத்திற்கு அண்மையில்] கொக்குவில்.
[22123]

### வியாழ மாற்றம்

11-9-92 இல் நிகழும் வியாழ மாற்றப் பலாபலன்கள் விற்பனையாகின்றன. பன்னிரு இராசிகளுக்கும் விரிவான பலன்கள் உண்டு. விலை ரூபா 8/-. திருக்கணிதம், மட்டுவில், சாவகச்சேரி. [22056]

### O/L கணிதம்

Credit, Distinction பெறு பேறுடைய 15 வருடங்கள் விடைத்தாள்கள் திருத்திய B.Sc. (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி.
[22127]

### O/L MATHS

தனியாகவோ, சிறு குழுவாகவோ பல வருட அனுபவமிக்க பயிற்றப்பட்ட ஆசிரியரினால் வீடுகளில் வந்து கணிதம் கற்பிக்கப்படும். திறமைச் சித்தி நிச்சயம். தொடர்பு: T. நாகேந்திரம், வசந்தம் புத்தகசாலை, இல: 405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [22081]

### புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[5237]

---

ஓம்
அருள்மிகு
## காளியம்பாள் தேவஸ்தானம்
யாழ்-வண்ணை, கன்னாதிட்டி,

ஏத்துமடிய வரிரேழு உலகினையும் படைத்தும்
காத்து மழிந்துந் திரிபவராங் கமழ் பூங்கடம்பு
சாத்துங் குழலணங்கே மணநாறுநின்
-தாளிணைத்தகன்
நாத்தங்கு புன் மொழியேறியவாறு நகையுடைத்தே.

தாயின் இன்றைய தேர் உலாவின் போது அனைவருக்கும் தாயின் அருள் பாலிக்க;

## அசோகா ஆபரண மாளிகை
275, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[சி/3129]

---

ஓம் சக்தி
ஓம் விராட் விஸ்வப் ப்ரஹ்மனே நம:
## அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்
யாழ். வண்ணை, கன்னாதிட்டி.

வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகந்
தந்தே பரிவொரு தான்போ யிருக்குஞ் சதுர்முகமும்
பைந்தே னலங்கற் பருமணி யாகமும் பாகமும் பொற்
செந்தேன் மலரு மலர்கதிர் ஞாயிறுந் திங்களுமே.

### மஹோற்சவ இரத உற்சவம்
இன்று காலை 9 மணி

## ஜீலக்ஷ்மி புகைப்பட சேவை
337, முதலாவது மாடி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[சி-3128]

---

## 41ஆம் நாள் என் நினைவாக....

## வீரவேங்கை இயல்வாணன்
(கஸ்ரோ)
(சோமசுந்தரம் கமலநாதன்)
(வாரிவளவு - காரைநகர்)

வீரஜனனம்: 28 — 12 — 1974
வீரச்சாவு: 03 — 07 — 1992

கண்கலங்கி குரலடைக்க
கவலையுறும் என்னவரே
விண்கலந்தேன் என்றெண்ணி
வீணாகப் புலம்புவதேன்?
மண்கலந்தேன் தமிழீழ
மாவீரன் எனச் சிறந்தேன்
எண்கலந்த என்தாகம்
இருப்பவர் நீர் போக்கிரோ?

சிதைந்திட்ட என்னுடலால்
சிந்தியசெந் நீரெல்லாம்
விதைத்திட்ட என்னுடலின்
வித்துகளாய் வெடித்துஎழும்
அதைத் திட்டமாய் நம்பி
அணிவகுத்தென் அடி தொடர்வீர்
இதைத்தானே என் ஆன்மா
இரக்கிறது உங்களிடம்.

மாவீரன் இயல்வாணன் (கஸ்ரோ)

இன்று 12 - 08 - 1992 இல் எமது மைந்தனின் 41-ஆம் நாள் நினைவுதினந்தன்று சுன்னாகம் மேஜர் காசி வீதியில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக் கிரியைகளிலும், தொடர்ந்து வழங்கவிருக்கும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

— குடும்பத்தினர்.

மேஜர் காசி வீதி,
கே. கே.எஸ். வீதி,
சுன்னாகம். [22030]

---

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க
Sep.இல் நடைபெறவுள்ள
## எழுதுவினைஞர் சேவை
போட்டிப் பரீட்சைக்குரிய
## விசேட பயிற்சி வகுப்புகள்

2ஆவது பிரிவு
**ஆரம்பம்: 15 - 08 - 1992**
பி.ப. 2 மணி;

பாடநெறி:
(1) மொழிப் பயிற்சி (11) தகுதித்தேர்வு

★ விரிவுரைகள் சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
★ கட்டணம் ரூபா 300/- (முழுப்பயிற்சிக்கும்)
★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்

## ASTAN INSTITUTE
101/10, STANLEY ROAD
JAFFNA.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
[சி 3033]

---

## 41ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 28 — 12 — 1974



வீர மரணம்: 03 — 07 — 1992

## இயல்வாணன் (கஸ்ரோ)
(சோமசுந்தரம் கமலநாதன்)

கஸ்ரோ தன் பள்ளிப்படிப்பிலே ஆசிரியர்களே போற்றத்தக்க வகையில் மிகவும் சிறந்து விளங்கினான். அவன் பள்ளிப் படிப்போடு மட்டும் நின்று விடவில்லை. பொது நிகழ்வுகளிலும் தன் பங்கைச் செலுத்தினான். மாவீரர்களின் ஞாபகார்த்த நிகழ்வுகளிலும், அகதிகள் முகாம் பராமரிப்பிலும், அகதிகள் நிதி சேகரிப்பிலும் தானும் அவர்களில் ஒருவன் என்ற உணர்வோடு மிகவும் உற்சாகத்தோடும், சுறுசுறுப்போடும் செயற்பட்டான். எவரையும் தன் அன்பினாலும், பண்பினாலும் தன் பக்கம் ஈர்க்கும் தன்மையுடையவன். இவ்வாறான இயல்புகளை தன்னகத்தே கொண்ட அவன் நாம் வாழும் அடிமை வாழ்வைப் பற்றியும் சிந்தித்தான். நமக்கென்று ஓர் எதிர்காலம் வேண்டும். நாமும் தன்மானம் உள்ளவர்கள் என்ற உணர்வு ஏற்பட்டது: அதை அடையவேண்டுமானால் நாமும் போராளியாக மாறவேண்டும் என்ற பதிலோடு தன்னையும் 13-01-1991 அன்று போராளியாக இணைத்துக் கொண்டான். அவன் சக போராளிகளோடும் மிகவும் அன்பாகப் பழகிக் கொண்டான். கஸ்ரோவின் இறுதி வைபவ நிகழ்வின் மூலம் அவன் சக உறுப்பினரோடும் எவ்வளவு அன்பாக நடந்து கொண்டான் என்பதை அறியக் கூடியதாக இருந்தது. ஆனையிறவுப்போர் போன்ற பெரும் போர்முனைகளில் தன் காலடியை பதித்துக் கொண்ட இயல்வாணன் கட்டைக்காட்டில் நடந்த பலவேகய II ஆக்கிரமிப்புப் போர் முனைக்கும் செல்ல விரும்பினான். அனுமதி கிடைத்த பின்பு தான் அவன் முகத்தில் புன்சிரிப்பைக் காண முடிந்தது. எதிரிகளின் வேட்டுக்களுக்கு அஞ்சாத அவன் 03-07-1992 அன்று தாய் மண்ணை முத்தமிட்டு தன்னையும் ஒரு மாவீரனாக ஏற்றுக்கொண்டான்.

உன்சிரிப்பாலும் பண்பான பேச்சாலும்
பணிவான நடத்தையாலும் —
எம் நெஞ்சங்களில் உன் நினைவலைகள்
நிஜமாய் நிற்கிறதே இயல்வாணா!
எங்கள் மண்ணில் எதிரியின் கால்பட
நெஞ்சு பொறுக்குமா என்று
பள்ளிப்படிப்பை பாதியில் விட்டு
வேங்கைப் படையில் சேர்ந்தவனே!
கட்டைக்காட்டில் களம் கண்டவனே!
உந்தன் இலட்சியம் நிச்சயம் மலர்ந்து விடும்;

வாழ்க தமிழ்! வளர்க தமிழீழம்!!

காரைவாழ் மக்கள் சார்பில் கஸ்ரோவின்
[சி-2495] அன்பிற்கும், பண்பிற்கும் பாத்திரமானவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பாதுகாப்பும் பழிவாங்கலும்

மட்டக்களப்பு மாவட்டம் புனாணைப் பகுதியில் ஐம்பது தமிழ்ப் பொதுமக்களை இராணுவத்தினர் படுகொலை செய்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

தென்தமிழீழத்தில் தமிழர்களைப் படையினர் இவ்வாறு பெரும் எண்ணிக்கையில் மிருகத்தனமாகப் படுகொலை செய்வது இது முதலாவது தடவையல்ல: வருடாந்தம் பல சம்பவங்கள் நடக்கின்றன. தங்கவேலாயுதபுரம் படுகொலைகள் முதல் கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் வரை பல உதாரணங்கள் உள்ளன.

இந்தப் படுகொலைகள் எல்லாம் படையினருக்கு ஏற்படும் சில உயிரிழப்புகளுக்காகப் பழிவாங்கி பல நிராயுதபாணிகளான அப்பாவிப் பொதுமக்களைப் பலி கொள்வதாகவே அமைந்துள்ளன. ஒரு சிப்பாய் போராளிகளிடம் உயிரிழந்துவிட்டால் பத்து அப்பாவிப் பொதுமக்களை எப்படியாவது கொன்றுவிடுவது, பெருந்தொகை பெறுமதியான சொத்துக்களை அழித்து நாசம் செய்வது என்ற நோக்குடன், கணக்குடன் அவை நடத்தப்படுகின்றன.

ஆயுதப்படையினருக்கு எவ்வித பாதிப்பும் உண்டாகாத சந்தர்ப்பங்களில் கூட அவர்கள் நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களைக் கொன்றும் தாக்கியும், உடைமைகளைச் சேதப்படுத்தியும் கோழைத்தனம் புரிவதுண்டு.

புனாணையில் நடந்த படுகொலைகள், வடக்கில் கொப்பேகடுவ, விமலரத்ன மற்றும் படை உயர் அதிகாரிகள் கொலையுண்டதற்கான பழிவாங்கல் நடவடிக்கையாக இருக்கும் என்றே அனுமானிக்க வேண்டியுள்ளது.

கொப்பேகடுவ, விமலரத்னவானாலும் சரி, படைச் சிப்பாய்களானாலும் சரி அவர்கள் போரில் இறந்து போனவர்கள். தங்கள் எதிரிகள் எனக் கருதப்படும் தமிழ்ப் போராளிகளுடன் ஆயுதம் கொண்டு போராடப் புறப்பட்டவர்கள். போராளிகள் அவர்களைக் கொன்றுவிட்டார்கள் என்றால், போராளிகள் பலம் மிக்கவர்கள், விவேகம் மிக்கவர்கள், சாதுரியம் மிக்கவர்கள் என்பது அர்த்தம். போரில் ஒன்றில் வெற்றி அல்லது தோல்வி கிடைக்கும் ஆனால் அந்த இரண்டையும் சமமாகக் கருதும் மனப்பக்குவம் போராடுபவனுக்குத் தேவை.

சிங்களப் படைகளிடம் அந்த மனப்பக்குவம் இல்லை. போராளிகளிடம் தமது சகபாடிகள் இறந்து விட்டால், தோற்று விட்டால் ஆற்றாமை மிகுதியால் அப்பாவித் தமிழர்களைக் கொன்று வஞ்சம் தீர்க்கிறார்கள்.

படை நெறியும், ஒழுக்கமும் கட்டுப்பாடும் இல்லாத ஆயுதப் படைகளையே தமிழர்கள் தங்களைப் பாதுகாக்கும் படைகளாகக் கொள்ள வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசும், தலைவர்களும் எதிர்பார்க்கிறார்கள்! இது பாலுக்குக் காவலாகப் பூனையை நிறுத்தும் செயலாகும்.

தமிழ்ப் பிரதேசங்களை இராணுவக் கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு அரசு முயற்சி செய்வது, தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்கே என்று அரசு கூறுவது அபத்தமானதாகும்.

தமிழர்களுக்குப் பாதுகாப்பாகத் தமிழர்கள் மட்டுமே இருக்க முடியும். வேறு எவருமல்லர். தமிழ் மண்ணையும் அவர்களாலேயே காப்பாற்ற முடியும்: இந்த நிலையை எய்தும் வரை தமிழர்கள் போராடியே தீருவர். அதனை நிறுத்துவதற்கான அரசியல் தீர்வு தமிழர்கள் தமது பாதுகாப்பையும், மண்ணின் பாதுகாப்பையும் தாமே உறுதி செய்ய வழிவகுப்பதாக அமைய வேண்டும்.

# யுத்தத்தை நிறுத்துவது தனது நலனுக்கு உகந்ததல்ல என்று அரசு கருதுகிறது

## சந்திரிகா சொல்கிறார்

*சுதந்திரக்கட்சியின் அத்தனகலை அமைப்பாளரான திருமதி சந்திரிகா குமாரணதுங்க 'சண்டே ஐலண்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலிருந்து சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.*

கேள்வி: 1987 இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் மாகாண அதிகாரப் பரவலாக்கல் முறை கொண்டு வரப்பட்டபோது அதனை முதலில் ஆதரித்தவர்களில் உங்கள் கணவரும் ஒருவர்: இனமோதல் பிரச்சினையில் தங்களின் அணுகுமுறை என்ன?

சந்திரிகா: அவரது நிலைப்பாடு காரணமாகத்தான் அவர் கொல்லப்பட்டார். நானும் அந்த நிலைப்பாட்டையே இன்றும் கொண்டுள்ளேன்.

சிங்களவருடன் சமத்துவ பிரஜைகளாக வாழும் உரிமை தமிழருக்கு உண்டு.

1983 தொடக்கம் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் கீழ் நடந்தவற்றால் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் தமது பகுதிகளில் உள்ள சிங்கள அரசின் நிர்வாகத்தின் மீது நம்பிக்கை இழந்துவிட்டனர்.

ஆகவே மிகவும் விரிவான அதிகாரப்பரவலாக்கல் தேவைப்படுவதாக நான் நினைக்கின்றேன். புவியியல் ரீதியாக இது சாத்தியமானதாகும். முஸ்லிம்களுக்கென தனியாக நிர்வாகக் கவுன்ஸில் முறையும் நல்லது. இதற்கு கிழக்கில் உள்ள முஸ்லிம்களின் சம்மதம் பெறவேண்டும்; கொழும்பில் உள்ள முஸ்லிம்களின் சம்மதம் அல்ல.

### 80 சதவிதமானோர் இனவாதிகள் அல்லர்

சிங்கள மக்களில் 80 சதவீதமானோர் இனவாதிகள் அல்லர்; அதிகாரப் பரவலாக்கலுக்கு அவர்கள் எதிரானவர்கள் அல்லர். அவர்கள் யுத்தத்துக்கு எதிரானவர்கள். நானும் யுத்தத்துக்கு எதிரானவர்.

இப்பிரச்சினையை உருவாக்கியவை பிரதான கட்சிகளான யு. என். பியும் சுதந்திரக் கட்சியுமே. தங்களின் அரசியல் ஆதாயம் கருதி இப்பிரச்சினையை அவை உருவாக்கின; அக்கட்சிகள் இன்னும் தொடர்ந்து அந்த வழியிலே சென்று கொண்டிருக்கின்றன. யுத்தத்தை நிறுத்த அரசாங்கம் உண்மையான விருப்பம் கொண்டுள்ளதா என்பதை நம்ப நான் தயார் இல்லை. யுத்தத்தை நிறுத்துவது அரசின் நலனுக்கு உகந்ததாக இல்லாததே காரணமாகும்.

1983 இல் இருந்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண அரசு தவறிவிட்டது. சிங்கள அரசாங்கத்தை நம்பமுடியாது என்ற செய்தியைத்தான் சிங்கள அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு 1983 இல் இருந்து தெளிவாகத் தெரிவித்து வந்துள்ளன. அதனால் தான் யாழ்ப்பாணத்து மக்கள் விடுதலைப் புலிகளை ஆதரித்து வருகின்றார்கள்.

### திசை திருப்ப யுத்தம்

பொருளாதார மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்காமல் வைத்துக் கொள்ளுமுகமாக மக்களைத் திசை திருப்ப குறைந்த வேகமுடைய ஐ. ஆர். ஏ. [I. R. A.] ரக யுத்தம் ஒன்று அரசாங்கத்துக்கு நன்மையாக இருக்கிறது.

கேள்வி: இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உகந்த சூழ்நிலையை உருவாக்க சுதந்திரக் கட்சி போதுமான அளவு உதவுகின்றதா? சுதந்திரக் கட்சிக்கு சிங்களப் பேரினவாதத் தோற்றத்தைக் கொடுக்கும் ஹெல உறுமய அணியின் விமர்சனங்கள் பற்றி என்ன எண்ணுகின்றீர்கள்?

### சு. கட்சியும் உதவவில்லை

சந்திரிகா: உகந்த சூழ்நிலையை உருவாக்க சுதந்திரக்கட்சி போதுமான அளவு உதவுவதாக நான் நம்பவில்லை.

இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணவேண்டும் என்றபோக்கு 1977 முதல் காணப்படுகின்றது.

கட்சியின் தலைமைத்துவம் ஜனநாயக மக்கள் முன்னணியின் வேலைத்திட்டத்தை நோக்கி செல்ல மீண்டும் முயற்சிக்கின்றது. அத்திட்டத்தில் உள்ள யோசனைக்கு நாம் ஆதரவு திரட்டுகின்றோம்.

பேரினவாதத்தை நோக்கி அபாயகரமான போக்கை ஹெல உறுமய அணி கடைப்பிடிக்கிறது.

நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னரே எனது தந்தை எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா சமஷ்டி அரசமைப்பு யோசனையைப் பிரேரித்தார். அவரைக் கூடத் தனக்கு ஆதரவாகக் காட்ட ஹெல உறுமய அணி முயற்சிக்கிறது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா ''சிங்கள மட்டும்'' கொள்கையை வலியுறுத்திய 1954-55 காலகட்டத்தில் எனது தந்தை சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கைக்காக வாதாடி வந்தார்.

1955 இல் மக்கள் ஐக்கிய முன்னணியுடன் தேர்தலுக்காகச் சேர்ந்தபோது தான் சம அந்தஸ்துக் கொள்கையைக் கைவிட எனது தந்தை தள்ளப்பட்டார்.

450 ஆண்டு கால குடியேற்ற ஆட்சியின் பின்னர் இலங்கை மக்கள் தமது தேசியத் தனித்துவத்தை மீளப்பெறுவதற்காக 'சிங்களம் மட்டும்' கொள்கையை எனது தந்தை கடைப்பிடித்தார்?

அவரின் இந்த நடவடிக்கை பிழையான வழியில் சென்றதை நான் மறுக்கமுடியாது. இதனைச் சிங்களப் பேரினவாதிகள் தமிழர் எதிர்ப்புக் கொள்கைக்கு பயன்படுத்தினர்.

1987இல் உருவான இந்திய-இலங்கை ஒப்பந்தத்திலும் பார்க்கக் கூடுதல் தீவிரம் வாய்ந்ததான தீர்வை 1958 இல் செய்துகொள்ளப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தம் முன் வைத்தது.

இனப்பிரச்சினை தொடர்பாக எனது தந்தை எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கையில் இருந்து கூடுதல் தூண்டுதலைப் பெறமுடியும்.

[இ-எ]

# இனக் குரோத வதந்திகள் குறித்து தெற்கில் பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஆக. 12

கொழும்பு உட்பட தென் பகுதியில் வதந்திகளைப் பரப்புவோர் குறித்து பொது மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று பொலீஸார் கேட்டுள்ளனர்.

விஷமிகள் மக்கள் மத்தியில், குறிப்பாக சிறுபான்மையினரிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் முகமாக வதந்திகளைப் பரப்ப எத்தனிக்கின்றனர் எனவும் —

எனவே மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் பொலீஸார் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை —

வெள்ளவத்தைப் பகுதியில் கடந்த ஞாயிறு இரவு இடம் பெற்ற பெற்றோல் குண்டு வெடிப்புச் சம்பவம் இரு பகுதியினருக்கு இடையிலான குரோத நடவடிக்கையாகும் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர். [இ-எ]

## 1,800 இலங்கையர்கள் வெளிநாட்டுச்சிறைகளில்!

வெளிநாடுகளில் உள்ள சிறைகளில் சுமார் ஆயிரத்து 800 இலங்கையர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாக சர்வதேச பொலீஸார் இலங்கை இரகசியப் பொலீஸாருக்குத் தெரிவித்திருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தாலி, ஆஸ்திரேலியா, தாய்லாந்து, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலேயே கூடுதலானோர் சிறை வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும்-

அவர்களில் அனேகர் போதை வஸ்து கடத்தல் போன்ற குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-10)

## உற்சவம்

குருநகர், ஆக. 12

அளவெட்டி தெற்கு. நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் கோவிலின் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ரதோற்சவம் இடம்பெறும். [த-51]

★ ★ ★

யாழ். வண்ணார்பண்ணை கன்னாதிட்டி காளியம்பாள் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த் திருவிழா இன்று காலை இடம்பெறவுள்ளது. (உ-162)

★ ★ ★

வடமராட்சி, ஆக. 12

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா இன்று காலை 9 மணிக்கும் மறுநாள் காலை 6 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(உ-165)

## நாவற்குழி சேதம் படம் பிடிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஆக. 12

ஆய்வுக் கட்டுரைகள் எழுதும் பிரபல லண்டன் பத்திரிகையாளரான திரு. மார்க் கியூட்லி நேற்று முன்தினம் நாவற்குழிப் பகுதியில் 'சுப்பசோனிக்' விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுச் சேதங்களைச் சென்று பார்த்து அவற்றைப் படம் பிடித்தார்.

இவர் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவிலுக்கு ஏற்பட்ட குண்டு வீச்சுச் சேதம் உட்பட குடாநாட்டில் இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட பல்வேறு அனர்த்தங்களையும் நேரில் பார்த்து கேட்டறிந்து கொண்டார்.

[ஒ-5]

## விடைத்தாள்கள் அனுப்பப்படும்

யாழ்ப்பாணம், ஆக. 12

தற்போது நடைபெற்று வரும் ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சையின் முதல் 7 நாட்கள் நடைபெற்ற பாடங்களின் விடைத்தாள்கள் இன்று காலை திருகோணமலைக்கு செல்லும் குமண கப்பலில் ஏற்றி அனுப்பப்படவிருப்பதாகத் தெரிகிறது.

# புலிகளுக்கு எதிரான நடவடிக்கை தொடரும்

## தளபதிகளிடம் படையினர் உறுதி

கொழும்பு, ஆக. 12


விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று இராணுவத்தினர் உறுதி அளித்துள்ளனர்.

இப்படி இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

அராலித்துறையில் இடம் பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவ [illegible] காரிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதிக்கு விஜயம் செய்த இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தினா, கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ ஆகியோரிடம் படையினர் இந்த உறுதிமொழியை அளித்தனர் என்றும் —

இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொள்வதில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என்றும் படையினர் [illegible] அதிகாரி தெரிவித்தார். [இ-எ]

உ



## அருள்வான் ஆறுமுகன்

நல்லூரான் திருவடிகளை நாடித் தொழுங்கள்
அல்லல்கள் அறும் ஆனந்தம் - பெருகும்
சொல்லொணாத் துயரும் சோதனையும் நீங்கும்
எல்லாமவன் செயலென உணர்.

நாடித் தொழுங்கள் நல்லூரான் அடிகளை
வாடிப் பதம்பணியுங்கள் பரமன் - மகனை
ஓடிவிடும் உங்கள் தீவினைப் பயன்கள்
ஆடிடும் மயிலேறி அருள்வான் ஆறுமுகம்.

- சி. சபாநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெற்பலி அகதி முகாமில் இளம்பிள்ளை வாத நோய்

கெற்பலி அகதி முகாமில் இளம்பிள்ளை வாத நோய் ஏற்பட்டுள்ளது. இந்த நோயினால் பாதிக்கப்பட்ட தர்ஜினி என்ற நாலு மாத குழந்தை யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறது. மேலும் ஒரு குழந்தைக்கும் இளம்பிள்ளை வாதம் ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இந்நோய் மேலும் பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள யாழ். தொற்று நோயியலாளர் டாக்டர் கே. ரீ. சிவபாதமும் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரும் கடந்த ஞாயிறன்று கெற்பலி அகதி முகாமுக்கு விஜயம் செய்தனர்.

அங்குள்ள ஐந்து வயதுக்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் அவர்கள் போலியோ தடுப்பு மருந்து கொடுத்தனர். [இ-18]

## கடந்த 56 நாட்களில் மட்டும்

# அதிஉயர் அதிகாரிகள் உட்பட 311 ஸ்ரீலங்காப் படையினர் பலி

யாழ்ப்பாணம், ஆக. 12

கடந்த ஜூன் மாதம் 16 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரையான— ஐம்பத்தாறு நாட்களில் விடுதலைப் புலிகள் நடத்திய பல்வேறு தாக்குதல்களில் 311 இற்கும் அதிகமான ஸ்ரீலங்காப் படையினர் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு ''விடுதலைப் புலிகள்'' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேகாலப் பகுதியில்—

★ 208 ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

★ சீனத் தயாரிப்பு டாங்கிகள், பவள் கவச வாகனங்கள், 17 இராணுவ டிரக்குகள் ஆகியன தகர்க்கப்பட்டன அல்லது சேதமாக்கப்பட்டன.

★ சீனத் தயாரிப்பான வை - 8 ரக இராட்சத விமானம் - ஆனையிறவுச் சமரின்போது நடு வானிலேயே நொறுக்கப்பட்டது. (ஒ)

## கனத்தை இறுதிக் கிரியைகள்

# கொப்பேயின் மனைவியின் விருப்பப்படியே நடந்தன

கொழும்பு, ஆக. 12

லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் இறுதிச் சடங்குகள் அவரது மனைவியின் விருப்பப்படியே நடத்தப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க இத்தகவலைத் தெரிவித்தார்.

இறுதிச் சடங்குகள் பின்போடப்பட வேண்டும் என்று சிலர் யோசனை தெரிவித்தனர். திருமதி கொப்பேகடுவ இதனை விரும்பவில்லை.

கனத்தையில் இடவசதி போதாது என்றும் சுதந்திரச் சதுக்கத்தில் இறுதிச் சடங்கு நடத்தப் பட வேண்டும் என்றும்சிலர் யோசனை தெரிவித்தனர். அதை அவ்வாறு செய்திருக்க முடியும். திருமதி கொப்பேகடுவ இதனையும் விரும்பவில்லை. கனத்தையில் இறுதிச்சடங்குகள் பெரிய ஆடம்பரமின்றி எளிமையான முறையில் தாமதமின்றி நடத்தப்பட வேண்டும் என்று திருமதி கொப்பேகடுவ விரும்பினார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னரே லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவவின் தந்தை றோஸ்மிட் பிளேஸ் இல்லத்தில் இறந்தார். கொப்பேகடுவ குடும்பத்தினர் அடுத்தடுத்து ஏற்பட்ட நிகழ்வுகளினால் பெரும் வேதனைக்குள்ளாகியிருந்தனர்.

—இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. [உ-எ]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தசாமி வள்ளியாச்சி

08-08-1992 சனிக்கிழமை சிவபதம் அடைந்த பண்ணாகத்தைச் சேர்ந்த திருமதி கந்தசாமி வள்ளியாச்சி அவர்களின் ஈமக்கிரியைகள் இன்று [12-08-1992] புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சீனிவாசகம், [கொத்தணி அதிபர், வவுனியா ம வி.]
க. கிருஷ்ணமூர்த்தி [இ. போ. ச. காரைநகர்]
[மக்கள்]

பண்ணாகம்,
சுழிபுரம்.
[22130]

### பொன்னம்பலம் சுப்பிரமணியம்

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் சுப்பிரமணியம் காலமானார். இவர் திருமதி சின்னம்மாவின் அன்புக் கணவரும், திரு. சு. சிவபாதம் [தபால் அதிபர், கோப்பாய்), திரு. இராசேந்திரம் [இலங்கை போக்குவரத்துச் சபை, கோண்டாவில்]. திருமதி கமலேஸ்வரி சிவரத்தினம் [கொழும்பு], திருமதி விஜயராணி தில்லைநாதன் [சவுதி அரேபியா] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தெய்வநாயகி, செல்வராணி, சிவரத்தினம், தில்லைநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிறிபரன், திலீபன் [பிரான்ஸ்], தனுசியா, திருப்பதி - காந்தன், தவநிதி, சங்கீதா, அனுசியா, அனுராஜ், சுறாணி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், J. V. பிள்ளையின் [இளைப்பாறிய பொலீஸ் இன்ஸ்பெக்டர்] மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்கு அவரது கோப்பாய் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று காலை 10-00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோப்பாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சு. சிவபாதம் [மகன்]

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
[22137]

### முருகேசு இராசரெத்தினம்

வேலணை மேற்கு முருகேசு இராசரெத்தினம் (இ. போ. ச. உத்தியோகத்தர்] அவர்கள் [10-08-92] திங்கள் கனடாவில் காலமானார். இவர் இலட்சுமிப்பிள்ளையின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற முருகேசு-தையல்அம்மை தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற பேரம்பலம் இரத்தினத்தின் மருமகனும், காலஞ்சென்ற சபாரெத்தினம் தருமலெட்சுமியின் சகோதரரும், காஞ்சனமாலா, இரஞ்சிதமலர், சிவகலை, ஸ்ரீஸ்கந்தராசா, காலஞ்சென்ற யோகராசா, மகேந்திரராசா [கனடா], ஞானகலை [கனடா], ஆனந்தராசா [கனடா], நிர்மலா [கனடா], அழகராசா [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், மாசிலாமணி (தலைவர், வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்], காலஞ்சென்ற வரதராசா, நடனசிகாமணி, ஜெயராணி, றஞ்சி, அனுசியா [கனடா] ஆகியோரின் மாமனாரும், திலகவதி, சிவயோகம், பரமலிங்கம், அன்னம், காலஞ்சென்ற குணசிங்கம், காலஞ்சென்ற சரஸ்வதி, சுசிலாதேவி [கனடா], சிவலிங்கம், சின்னத்தம்பி, அன்னலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற அருணகிரி [சமாதான நீதவான்], கைலாயபிள்ளை [கனடா], சண்முகலிங்கம், பிரபாகரன், மயில்வாகனம் [கனடா], தவமணி, கலைமகள், புவனேஸ்வரி ஆகியோரின் சகலனும், யசோதா, தெய்வீகன், ராசீகன், ஜெயசீகன், சுஜாதா, லோஜிதா, சுதர்சன், அஜந்தன், பொன்விழி, நந்தகுமார், அகல்விழி, கயல்விழி, சசிகுமார், பாலகுமார், லதாங்கினி, சுவர்னா, சோபனா, கீர்த்திகா, சுயன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவர்க்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
பொ. மாசிலாமணி
[மருமகன்]
தலைவர் வே. ப. நோ. கூ. ச.

41/6 மானிப்பாய் வீதி,
கோணாந்தோட்டம்,
யாழ்ப்பாணம்.
[22132]

## இன்று

சித்தன்கேணி, ஆக. 12

வட்டுக்கோட்டை இந்து இளைஞர் கலாசார மன்றத்தினர் ஏற்பாடு செய்துள்ள சமய அறிவு மற்றும் பொது உளச்சார்பு போட்டிகள் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (த-142)

★ ★ ★

யாழ். மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் சாரணரானவர் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறும்.

★ ★ ★

சுந்தர்மடம், ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடப் பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் இடம்பெறும் மாதாந்த சொற்பொழிவில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர் திரு கா. சிவப்பிரகாசம் ''இந்து சமயக் கல்விக் கோட்பாடும் அதன் நிகழ்காலத் தேவையும்'' என்ற பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

★ ★ ★

வடமராட்சி, ஆக. 12

செஞ்சோலைக் குழந்தைகளும், போராளிக் கலைஞர்களும் இணைந்து வழங்கும் ''சப்தஸ்வரா'' வின் இசை மாலை நிகழ்ச்சி இன்று இரவு 8 30 மணிக்கு பருத்தித்துறை பழைய பஸ்நிலைய மைதானத்தில் நடைபெறும். (உ-165)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக. 12

நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் தொண்டர் சேவையில் ஈடுபட்டுள்ள சகல தொண்டர் ஸ்தாபனங்களினதும் தலைவர், செயலாளர் மற்றும் தடை முகாமில் கடமையாற்றும் யாழ். மாநகர சபை ஊழியர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ். மாநகர சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (உ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக. 12

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் பண்டத்தரிப்புக் கோட்டப் பிரிவினர் வட்டுக்கோட்டையில் உள்ள தொண்டேயம் தொழிற் பயிற்சி மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு கல்வி வளர்ச்சிக் கழகம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளனர். இந் நிகழ்வின் இறுதியில் பண்டத்தரிப்பு கோட்ட மாணவர்களின் புரட்சி கானங்கள் இசை நிகழ்வு இடம்பெறும்.

புதிய கல்வி வளர்ச்சிக் கழகத்தில் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 11 வரையான மாணவர்[illegible] பட்டது.

## மூலிகை மருந்து விற்பனை ஆரம்ப விழா

கூட்டுறவு மூலிகை மருந்துச் சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துகளின் விற்பனை ஆரம்ப விழா இன்று சித்தன்கேணியில் நடைபெறுகிறது.

பனை, தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களின் வலிகாமம் கொத்தணியின் அனுசரணையுடன் சித்தன்கேணிச் சந்தியில் இந்த மருந்தகம் அமைந்துள்ளது.

இன்று காலை ஒன்பது மணிக்கு நடைபெறவுள்ள மருந்து விற்பனை ஆரம்ப விழாவுக்குக் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. ரி. சபாரத்தினம் தலைமை வகிப்பார். மருந்து விற்பனையை அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ஆரம்பித்து வைப்பார். மில்க்வைற் அதிபர் கலாநிதி க. கனகராசா மருந்தைப் பெற்றுக் கொள்வார். விடுதலைப் புலிகள் பிரமுகர்களும் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுவார்கள்.

முழுக்க முழுக்க உள்ளூர் மூலப் பொருள்கள், மூலிகைகளைக் கொண்டே மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. (அ)

## நல்லூரில் இன்று

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு ஆலய சுற்றாடலில் — மஞ்சத் திருவிழாவான — இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப் பந்தலில் (மாலையில்) - என். கே. பத்மநாதன் குழுவினரின் கெஞ்சிற் கச்சேரி.

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் (மாலையில்) - கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்தும் ''தாரகன் வதம்'' என்ற பொருளில் கந்தபுராண கதாப்பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு — கந்த புராணப்படிப்பு, பிற்பகல் 3 00 மணிக்கு — பௌராணிகர் மு. தியாகராசாவின் ''முருக இலக்கியங்கள்'' தொடர் விரிவுரை. [உ-30-126]

## மரண அறிவித்தல்

### திருமதி குமரேசு நல்லம்மா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சாவகச்சேரி சங்கத்தானையில் வசித்தவருமான குமரேசு நல்லம்மா [ஓய்வுபெற்ற பெண் பரிசாரகர், யாழ். போதனா வைத்தியசாலை] காலமானார். இவர் குமரேசுவின் அன்பு மனைவியும் அருந்ததி, தங்கராசா [பிரான்ஸ்], சாவித்திரி [பிரான்ஸ்], சந்திரமதி (இந்தியா], நளாயினி, தியாகராசா [பிரான்ஸ்], கோசலை ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்னம்மா, ஜெகதாம்பாள் (பிரான்ஸ்) தனபாலசிங்கம் [பிரான்ஸ்], சங்கர், சிவாமலா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - தெய்வானை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நல்லதம்பி-வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, கணபதிப்பிள்ளை, செல்லம்மா, செல்லத்துரை, சுப்பிரமணியம், பரிபூரணம், நல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகம்மா, செல்வம்மா, இராமலிங்கம், மனோன்மணி, இளையப்பா, யோகம்மா, இராசம்மா, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற கௌரி, மயூரநாதன் [பிரான்ஸ்], கணேசானந்தன், கஜன், கஜனி, கஜமுகன், ரமணன், டக்சன், தர்சிகா, செந்தூரன், ஹேமமாலினி, தர்சினி, சுதர்சன், கார்த்திகாயினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 5 மணியளவில் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சங்கர்
[மருமகன்]

சங்கத்தானை,
சாவகச்சேரி.
[22138]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org